தொகை திட்டத்தை நிறுத்த பார்த்தனர். வேண்டும்" இவ்வாறு அவர் கூறினார்.

யார் ஆட்சி மலரா வாக தேவ நல்லூர் கொடுத்த பாஜகவிற்கு வாக்களிக்குமாறு சின்னத்தில் வாக்கு சேகரித்தனர்.

# ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் ஸ்ரீராம் ஆராய்ச்சி பூங்கா தொடங்கப்பட்டது




வேப்பம்பட்டு, ஏப்ரல், 19, திருவள்ளூர் மாவட்டம், வேப்பம்பட்டில் இயங்கி வரும் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி தனது வளர்ச்சி பயணத்தில் முக்கியமான கட்டத்தை எட்டும் வகையில் ஸ்ரீராம் ஆராய்ச்சி பூங்கா திறக்கப்பட்டது. இந்நிகழ்வில் 300 க்கும் மேற்பட்ட மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டனர்

இதில் Kronix tech, Kenmac, S-GEN Energy & Infra மற்றும் DTEDI ஆகிய தொழில் நிறுவனங்கள் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியுடன் இணைந்து ஆராய்ச்சி பூங்காவை தொடங்கியுள்ளது. இது மாணவர்களின் புதுமை சிந்தனை, தொழில் முனைவு திறன் மற்றும் தொழில்துறை இணைப்புகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ளது. இந்த ரிசர்ச் பார்க் புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது

இவ்விழாவின் தொடக்க நிகழ்வாக, ஸ்ரீராம் ஆராய்ச்சி பூங்கா நிறுவனத்தை ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை செயலாளர் M.D.G. ராஜ்குமார் தலைமையிலும் பல்வேறு தொழில் நிறுவனர்கள் மற்றும் கல்வியாளர்கள் முன்னிலையிலும் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கல்லூரி முதல்வர், முனைவர் B.R. ரமேஷ்பாபு வரவேற்புரையும் வாழ்த்துரையும் வழங்கினார்

ஸ்டார்ட் அப் ஒருங்கிணைப்பாளர் செல்வி எஸ்.சௌமியா இந்த ஆராய்ச்சி பூங்கா உருவாக்கப்பட்டதன் நோக்கம் குறித்து உரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களான Shortfundly நிறுவனர் எம். செல்வம் மற்றும் Ziffity solutions இயக்குனர் எஸ். சத்யபிரகாஷ், ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்

இதனைத்தொடர்ந்து ஸ்ரீராம் ஆராய்ச்சி பூங்காவில் பயிற்சிபெறும் மாணவர்கள் தாங்கள் பெரும் அனுபவங்களை நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு விளக்கி கூறினார்கள். கணினி அறிவியல் துறை தலைவர் முனைவர் பி.மகேஷ் ஆராய்ச்சி பூங்காவின் முக்கியத்துவம் குறித்தும் அதனால் மாணவர்கள் அடையும் நன்மைகள் குறித்தும் உரையாற்றினார்

நிறைவாக Kronix tech நிறுவனத் தலைவர் ராஜா நன்றியுரை வழங்கினார். ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் தொடங்கியுள்ள ஆராய்ச்சி பூங்காவை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தொழில் நிறுவனர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிட்டு சிறப்பு செய்தார்கள்

இந்த ஸ்ரீராம் ரிசர்ச் பார்க்துவக்கமானது கல்வி மற்றும் தொழில் துறையை இணைக்கும் ஒரு புதிய முயற்சியை உருவாக்கும் முக்கியமான நிகழ்வாகக் கருதப்படுகிறது